நிதி நெருக்கடி சூழலிலும் மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றம்



கோபி, அக்.13: நிதி நெருக்கடி சூழலிலும் மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்று வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டம், கோபி அருகேயுள்ள செம்மாண்டம்பாளையம் பகுதியில் முழுநேர நியாய விலைக் கடை திறப்பு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் கந்தராஜா தலைமை வகித்தார். கோபி கோட்டாட்சியர் சிந்துஜா முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பங்கேற்று, முழுநேர நியாய விலைக் கடையைத் திறந்துவைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருள்களை வழங்கி பேசியதாவது:

தமிழக அரசுக்கு ரூ.13 லட்சம் கோடி கடன் உள்ளது. ஒரு நாளைக்கு வட்டி மட்டுமே ரூ.347 கோடி செலுத்த வேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளது. இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

தவெக ஆட்சியில் பெண்கள் அனைவரும் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் தமிழகம் முழுவதும் பயணம் செய்ய முடிகிறது. அரசு மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறந்தால் அந்தக் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பெண்கள் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம், பட்டுப் புடவை வழங்கும் திட்டத்தை முதல்வர் ச.ஜோசப் விஜய் விரைவில் தொடங்கிவைப்பார். மக்கள் தூய்மையான ஆட்சி நடைபெற வேண்டும் என விரும்புகின்றனர்.

பொதுமக்கள் தங்களுக்கு சேர வேண்டிய உரிமைகள் எதுவாக இருந்தாலும் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். பதிவு செய்து 15 நாள்களுக்கு உரிய பதில் வரவில்லை என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நாங்கள் கேள்வி கேட்போம். அதிமுகவில் இருந்து 15 பேர் வெளியேற வாய்ப்பு உள்ளது என்றார்.

தேர்தல் ஆணையருக்கு எதிராக திமுக ஏன் போராடவில்லை?

மாணிக்கம் தாகூர் கேள்வி



சென்னை, அக். 13: தலைமைத் தேர்தல் ஆணையரை மாற்றக் கோரி, நாடு தழுவிய அளவில் எதிர்க்கட்சிகள் போராடி வரும் நிலையில், திமுக ஏன் இது வரை போராடவில்லை என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தலைமைத் தேர்தல் ஆணையரை பதவி நீக்கக் கோரி, இண்டி கூட்டணியினர் போராடி வரும் நிலையில், திமுகவை சேர்ந்த 22 மக்களவை உறுப்பினர்களில் ஒருவர்கூட அந்தப் போராட்டத்தில் ஏன் பங்கேற்றவில்லை? பாஜகவை எதிர்த்தால் பல்வேறு வழிகளில் பிரச்னைகள் ஏற்படும் என்ற அச்சத்தின் காரணமாக திமுக தடம் மாறிப் போகிறதா? அல்லது வகுப்புவாத எதிர்ப்பைக் கைவிட்டு விட்டதா? பாஜகவை மக்கள் விரோதக் கட்சி என்று முழங்கிய திமுக, இன்று வாய்மூடி மௌனியாக இருப்பது ஏன்?

காங்கிரஸ் கட்சியின் கேள்வி மிகவும் எளிமையானது. நீங்கள் எந்தப் பக்கம் இருக்கிறீர்கள்? மோடியையும், அமித் ஷாவையும் எதிர்த்துப் போராடுவதாகத் தொடர்ந்து கூறுகிறீர்கள்; ஆனால், தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுந்து, நாடு முழுவதும் எதிர்கட்சிகள் வீதியில் இறங்கிப் போராடி வரும் நிலையில், நீங்கள் ஏன் போராடவில்லை?

இதை திமுக தலைமை தெளிவுபடுத்த வேண்டுமே ஒழிய, காங்கிரஸ் கட்சியை தரம் தாழ்ந்து விமர்சிப்பதால் எந்தப் பயனும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் பொன்முடி உள்ளிட்டோருக்கு எதிரான அமலாக்கத் துறை வழக்கு ரத்து



சென்னை, அக். 13: செம்மண் முறைகேடு தொடர்பாக,முன்னாள் அமைச்சர் பொன்முடி உள்ளிட்டோருக்கு எதிரான சட்டவிரோத பணப் பரிமாற்றத் தடை சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்கை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

கடந்த 2006 முதல் 2011-ஆம் ஆண்டு வரையான திமுக ஆட்சியில் உயர்கல்வி மற்றும் கனிம வளங்கள், சுரங்கத் துறை அமைச்சராக க.பொன்முடி பதவி வகித்தார். அப்போது, விழுப்புரம் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக அளவில் செம்மண் வெட்டி எடுத்ததன் மூலம், அரசுக்கு 28.36 கோடி இழப்பு ஏற்படுத்தியதாக ஊழல் தடுப்புத் துறை வழக்குப் பதிவு செய்தது. முன்னாள் அமைச்சர் பொன்முடி, அவரது மகன் கௌதம சிகாமணி,உறவினர் ராஜமகேந்திரன் உள்ளிட்டோர் மீதான இந்த வழக்கை விசாரித்த விழுப்புரம் மாவட்ட நீதிமன்றம், குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து, கடந்த ஏப்ரல் மாதம் தீர்ப்பளித்தது.

முன்னதாக, செம்மண் முறைகேடு தொடர்பாக கிடைத்தபெருந்தொகைஹவாலா பரிவர்த்தனை மூலம் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளதாகக் கூறி, முன்னாள்அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மகன் கௌதம சிகாமணி உள்ளிட்டோருக்கு எதிராக, சட்டவிரோத பணப் பரிமாற்றத் தடைச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறையினர் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக, கடந்த 2023-ஆம் ஆண்டு சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி பொன்முடி, அவரது மகன் கௌதம சிகாமணி உள்ளிட்டோர் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுக்களில், மூல வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டதால், சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்ட வழக்கை தொடர்ந்து விசாரிக்க முடியாது. எனவே, அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

இந்த மனுக்கள் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு வந்தன.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், உச்சநீதிமன்ற உத்தரவின்படி மூல வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பொன்முடி உள்ளிட்டோர் விடுதலைசெய்யப்பட்டுள்ளதால்,அமலாக்கத் துறை வழக்கை தொடர அனுமதிக்க முடியாது எனக் கூறி, வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டனர்.

இன்றும், நாளையும் 4 மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு

சென்னை, அக். 13: தமிழகத்தில் புதன், வியாழன் (அக். 14, 15) ஆகிய இரு நாள்கள் ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தெற்கு இலங்கை கடலோரப் பகுதிகளுக்கு அருகே உள்ள தென்மேற்கு வங்கக் கடல் பகுதியின் மேல் வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதுதவிர, தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியில் இருந்து மத்திய வங்கக் கடல் பகுதிகள் வரை ஒரு காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக புதன்கிழமை (அக். 14), ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது. திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகை, புதுக்கோட்டை,நீலகிரி,கோவை,திருப்பூர்,தேனி,திண்டுக்கல்,தென்காசி, விருதுநகர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர் ஆகிய 21 மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

2 நாள்களில் வடகிழக்கு பருவமழை: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை ஆண்டுதோறும் அக். 2-ஆவது அல்லது 3-ஆவது வாரத்தில் தொடங்குவது வழக்கம். அந்த வகையில், நிகழாண்டு வடகிழக்கு பருவமழை 2 நாள்களில் தொடங்குவதற்கான சாதகமான சூழல் நிலவுகிறது. அதேநேரம், வடகிழக்கு பருவமழை தென்னிந்தியாவின் தென் பகுதிகளில் தொடங்குவதற்கான சாதகமான சூழல் நிலவுவதாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஞானேஷ்குமாருக்கு எதிரான மனுவில் முதல்வர் விஜய் பெயர் இடம் பெறாதது ஏன்?

திமுக கேள்வி

சென்னை, அக். 13: இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் 'இண்டி' கூட்டணி தலைவர்கள் பெயர்கள் இடம்பெற்ற நிலையில், தவெக தலைவரும், முதல்வருமான ஜோசப் விஜய் பெயர் இடம்பெறாதது ஏன் என்று திமுக கேள்வி எழுப்பியது.

இது குறித்து மத்திய சென்னை மக்களவை திமுக உறுப்பினர் தயாநிதி மாறன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டப் பதிவு:

எஸ்ஐஆர் விவகாரத்தில் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிராக இண்டி கூட்டணி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ், தேவஸ்வி யாதவ், மம்தா பானர்ஜி உள்ளபட 11 தலைவர்களின் பெயர்கள் இடம்பெற்றிருந்த நிலையில், தவெக தலைவரும், முதல்வருமான விஜய் பெயர் இடம்பெறவில்லை.

பழக்க வழக்கமெல்லாம் பனையூருக்கு வந்து காபி சாப்பிடுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

பாசிச எதிர்ப்புக் கெல்லாம் என்னைக் கூப்பிடாதீர்கள் என விசிலடித்து அனுப்பி விட்டாரா விஜய்?

காங்கிரஸ் உள்ளிட்ட துரோகிகள் கழன்று கொண்ட பின்பும், இடைத்தேர்தலில் திமுகவின் வாக்கு சதவீதம் அப்படியே இருப்பதைப் பார்த்து, நீங்கள் வாக்கு வங்கி இல்லாத கூட்டணி என்பதை முதல்வர் தெரிந்து கொண்டாரா? என்றார் அவர்.

சேரன்மகாதேவி அருகே காவலரை வெட்ட முயன்ற ரவுடி கைது

சேரன்மகாதேவி, அக். 13: திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி அருகே ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, காவலரை அரிவாளால் வெட்ட முயன்ற ரவுடியை போலீஸார் கைது செய்தனர்.

சேரன்மகாதேவி காவல் சரகத்துக்குள்பட்ட கூனியூர் சக்திகுளம் பகுதியில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன் தலைமையில் போலீஸார் திங்கள்கிழமை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்குள்ள கோயில் அருகில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தபோது, அப்பகுதியில் பல குற்ற வழக்குகளில் தொடர்புடைய சக்திகுளம் தெற்குத் தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் சக்தி (29) என்பவர் சந்தேகிக்கும் வகையில் நின்று கொண்டிருந்தாராம். அவரிடம் போலீஸார் விசாரித்தபோது, தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் ரவுடி சக்தி, போலீஸாரை வெட்ட முயன்றதாக கூறப்படுகிறது. சுதாரித்துக் கொண்ட போலீஸார், அவரைச் சுற்றிவளைத்து பிடித்து காவல் நிலையத்துக்கு அழைத்து வந்தனர்.

இதுகுறித்து சேரன்மகாதேவி போலீஸார் வழக்குப் பதிந்து, சக்தியை கைது செய்தனர்.

'ஜெம்' வீரமணி 3-ஆவது வழக்கில் கைது: மேலும் இரு காவல் அதிகாரிகளிடம் விசாரணை

சென்னை, அக். 13: சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த விவகாரத்தில் ஜெம் வீரமணி மூன்றாவது வழக்கில் கைது செய்யப்பட்டார். இந்த விவகாரத்தில் மேலும் இரு காவல் அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழுவினர் விசாரணை செய்தனர்.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக 'ஜெம்' கிரானைட் நிறுவன உரிமையாளர் வீரமணி மற்றும் அவரது உதவியாளர் சாந்தி, அவர் கணவர் மகேந்திர சிம்ஹன், கணேசன், கார் ஓட்டுநர்கள் லாசர், பார்த்திபன், பாபு ஆகியோர் ஆகியோர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர்.

இந்த விவகாரம் குறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையர் தேன்மொழி தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவினர் விசாரணை செய்கின்றனர். ஜெம் வீரமணி மீது இதுவரை 10 சிறுமிகள் புகார் அளித்துள்ளனர். இதுவரை 7 வழக்குகள் வீரமணி மீது பதிவு செய்யப்பட்டுள்ளன.

வீரமணியிடம் பணம் பறிப்பு: வீரமணி, சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்தது குறித்து 2025 அக்டோபரில் சென்னை காவல் துறையில் விடியோ ஆதாரத்துடன் புகார் செய்யப்பட்டது. ஆனால், புகாரின்பேரில் காவல் துறை வழக்குப் பதிவு செய்துவிட்டு, விடியோவில் இருப்பவர்கள் யாரென்றே தெரியவில்லை என்று வழக்கை முடித்து வைக்க முயன்றது. ஆனால், போக்ஸோ நீதிமன்றம், அதை நிராகரித்து விசாரணைக்கு உத்தரவிட்டது.

உயர் அதிகாரிகளிடம் விசாரணை: இந்த விவகாரத்தில் மேலும் துப்பு துலக்கும் வகையிலும், வழக்கை முடித்து வைக்க முயன்ற புகார் தொடர்பாகவும் காவல் துறை உயர் அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

இதன் ஒருபகுதியாக அப்போது சென்னை பெருநகர காவல் துறை ஆணையராக இருந்த ஏடிஜிபி ஏ.அருண், கூடுதல் காவல் ஆணையராக இருந்த ஐஜி கண்ணன் ஆகியோரிடம் சிறப்பு புலனாய்வுக் குழு 3 மணி நேரம் விசாரணை செய்தது.

இதன் தொடர்ச்சியாக அப்போது மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையராக இருந்த ஏ.ராதிகா,பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு துணை ஆணையராக இருந்த வனிதா ஆகியோரிடம் விசாரணை நடத்தினர்.

3-ஆவது வழக்கில் கைது: இதற்கிடையே, ஜெம் வீரமணி மீது ஏற்கெனவே 2 வழக்குகளில் கைது நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், 3-ஆவது வழக்கில் செவ்வாய்க்கிழமை கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது.சிறப்பு புலனாய்வுக்குழு, தனது அடுத்தகட்ட விசாரணை அறிக்கையை அக்.27-ஆம் தேதி போக்ஸோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது.

வியாபாரியிடம் இணைய வழியில் ரூ. 4.98 லட்சம் மோசடி

திருச்சி, அக். 13: திருச்சியில் வியாபாரியிடம் இணையவழியில் ரூ.4.98 லட்சம் மோசடி செய்த சம்பவம் தொடர்பாக போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

திருச்சி வயலூர் சாலையைச் சேர்ந்தவர் ஜோ பிராங்க் சுரேந்திரன் (46). எம்பிஏ படித்து வரும் இவர், சொந்தமாக பாக்குமட்டை தட்டு உற்பத்தி செய்யும் கூடம் நடத்தி வருகிறார். இவர், கடந்த 9-ஆம் தேதி வயலூர் சாலையில் உள்ள தனியார் வங்கி ஏடிஎம் மையத்தில் பணம் எடுத்துள்ளார்.

அந்தப் பணப் பரிவர்த்தனைக்காக சிறிதுநேரம் கழித்து, அவரது கைப்பேசியின் கட்செவி அஞ்சலுக்கு குறுஞ்செய்தி வந்துள்ளது. அதில், ஏடிஎம் இயந்திரத்திலிருந்து பணம் எடுத்துள்ளீர்களா? என்ற கேள்வி இடம் பெற்றிருந்தது. இதை படித்துப்பார்த்த அவர், ஆம் என்று பதிலை பதிவு செய்து மீண்டும் அதே எண்ணுக்கு அனுப்பியுள்ளார்.

இந்த நடவடிக்கை முடிந்த விநாடியே அவரது வங்கிக் கணக்கிலிருந்து 4 லட்சத்து 98 ஆயிரத்து 833 ரூபாய் எடுக்கப்பட்டதாக தகவல் வந்துள்ளது. இதனால், அதிர்ச்சியடைந்தவர் தனது வங்கி கணக்கு விவரங்களை மீண்டும் சரிபார்த்தபோது, பணம் எடுக்கப்பட்டது உறுதியானது.

சம்பவம் தொடர்பாக வங்கி நிர்வாகத்திடம் அவர் தகவல் தெரிவித்தார். வங்கி அலுவலர்கள் அளித்த அறிவுரையின் படி, உடனடியாக இணைய வழி மோசடி தொடர்பாக இணையத்திலேயே புகார் அளித்தார். இணையத்தில் பெறப்பட்ட இந்தப் புகார், திருச்சி சைபர் குற்றப் பிரிவு போலீஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

புகாரைப் பெற்ற போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623, Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.o. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 16.11.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

திண்டுக்கல், அய்யலூர் திண்டுக்கல், 0128740700032075, 2809, 2999, 3002, 3009, 3020, 3030, 3031, 3036, 3042, 3043, 3044, 3051, 3061, 3067, 3075, 3087, 3106, 3108, 3109, 3112, 3121, 0128740730045036, 5129, 5131, 5159, 5164, 5183, 5184, 5188, 5192, 5193, 5194, 5195, 5200, 5205, 5207, 5216, 5217, 0282, 0286, 0287, 0289, 0291, 0293, 0299, வத்தலகுண்டு, 0101280700095524, 5845, 6978, 7038, 7059, 7148, 7271, 7281, 7292, 7303, 7316, 7325, 7330, 7336, 7350, 7357, 7359, 7360, 7377, 7380, 7382, 7396, 7398, 7413, 7414, 7415, 7416, 7423, 7427, 7433, 7443, 7445, 0101280730038517, 1283, 1574, 1591, 1597, 1628, 1629, 1647, 1650, 1656, 1657, 1658, 1668, 1674, திண்டுக்கல், 0124000700044224, 5361, 5413, 5431, 5455, 5517, 5521, 0124000730034666, 4748, 4749, 4757, 4758, 4816, 0423, 0430, எரியோடு திண்டுக்கல், 0127390700032535, 2688, 2695, 2703, 2717, 2721, 2723, 2727, 2734, 2736, 2737, 2752, 0127390730018504, 8505, 8526, 8529, 8531, 8551, 8556, 8564, 8569, 0162, குஜிலியம்பாறா திண்டுக்கல், 0119240700030832, 0877, 0878, 0886, 0894, 0896, 0902, 0963, 0119240730023882, 5672, 5676, 5724, 5834, 5835, 5862, 5884, 5956, 0283, 0294, கொடைக்கானல், 0129200700042392, 2482, 2503, 3475, 3599, 3662, 3691, 3741, 3744, 3747, 3752, 3755, 3761, 3766, 3772, 3781, 3785, 3798, 3803, 3810, 3813, 3815, 3819, 3830, 3834, 3837, 3841, 3844, 3848, 3852, 3863, 3864, 3872, 3878, 3885, 0129200730027577, 7681, 7682, 7684, 7690, 7696, 7721, 7773, 7775, 7783, 7785, 7786, 7792, 7801, 7819, 7831, நத்தம், 0102770700761195, 1212, 1223, 1224, 1238, 1239, 1261, 1281, 1284, 0102770730020030, 0050, 0067, 0068, 0073, 0080, 0091, 0250, 0262, ஓட்டன்சத்திரம், 0101510700765202, 6416, 6417, 6421, 6442, 6505, 6508, 6521, 6522, 0101510730028661, 2437, 2482, 2484, 2485, 2492, 2497, 0212, பழனி ஆர் எஃப் ரோடு, 0105360700791952, 2057, 2996, 3092, 3312, 3319, 3320, 3338, 3343, 3344, 3353, 3355, 3356, 3361, 3389, 3400, 3413, 3416, 3421, 3426, 3436, 3440, 3450, 3463, 0105360730062989, 6463, 6792, 6939, 6940, 6941, 6943, 6949, 6966, 6974, 7039, 7085, 7103, 7106, 7115, 0248, பழனி ரோடு திண்டுக்கல், 0102740700046737, 6873, 6883, 6887, 6893, 6925, 6926, 6965, 6970, 0102740730021506, 1634, 1648, 1681, 0130, 0133, 0138, பாளையம் திண்டுக்கல், 0130870700032080, 2345, 2452, 3231, 3364, 3417, 3461, 3470, 3472, 3475, 3481, 3491, 3495, 3498, 3500, 3506, 3527, 3543, 3553, 3554, 3567, 3571, 0130870730025615, 5767, 5768, 5769, 8656, 8730, 8741, 8744, 8805, 8807, 8815, 8827, 8829, 0273, 0284, வடமதுரை திண்டுக்கல், 0126100700036203, 6946, 6967, 7012, 7027, 7099, 7120, 7125, 7137, 7147, 7155, 7156, 7167, 7179, 7180, 7186, 7194, 7205, 7207, 7219, 7220, 7227, 0126100730038038, 0545, 0598, 0630, 0631, 0650, 0652, 0662, 0665, 0671, 0282, 0285, 0288, 0289, வேடசந்தூர், 0127070700034154, 4173, 4963, 5147, 5148, 5162, 5194, 5217, 5219, 5225, 5236, 5238, 5259, 5261, 0127070730025559, 5581, 5590, 5600, 5603, 5611, 5628, 5640, 5655, ஒய் எம் ஆர் பட்டி திண்டுக்கல், 0101900700760603, 0904, 1553, 1724, 1729, 1737, 1741, 1743, 1751, 1765, 1770, 1787, 1788, 1803, 1811, 1813, 0101900730042302, 2303, 2445, 2449, 2450, 2455, 2456, 2472, 2479, 0260, 0262, 0266, மதுரை, அழகர் கோயில் ரோடு தல்லாகுளம், 0101270700075996, 6207, 6240, 6243, 6257, 0101270730020739, 2913, 2976, 3021, 3054, 3093, 3097, அரப்பாளையம் பஸ் ஸ்டாண்டு, 0128270700027455, 7482, 0128270730013889, 0180, 0200, அரப்பாளையம் மதுரை, 0101140700795527, 5532, 6415, 6530, 6553, 6559, 6562, 6565, 6598, 6618, 6620, 0101140730019607, 9667, 9669, 9670, 9671, 9672, 9712, 9736, 9762, ஞாணஒளிபுரம், 0113900700036274, 6277, 6308, 6313, 6330, 6336, 6342, 6354, 6366, 6553, 0113900730013190, 3210, 3213, 3371, கருப்பாயூரணி மதுரை, 0112730700080362, 1755, 2041, 2081, 2194, 2200, 2205, 2211, 2219, 2225, 2265, 2272, 2282, 2302, 2308, 2312, 2325, 2327, 2331, 2341, 2365, 2368, 2374, 2383, 2420, 2576, 0112730730019584, 9585, 9684, 2101, 2299, 2359, 2382, 2402, 2403, 2405, 2416, 2417, 2418, 2450, 2451, 2456, 2457, 2458, 2467, 2479, 2489, 2490, 2514, 2525, 0285, மதுரை மேற்கு மாசி வீதி, 0102550700758772, 9265, 9268, 9279, 9282, 9300, 9301, 9306, 9313, 0102550730012468, 2568, 2569, 2575, 2584, 2589, 2590, 0153, மதுரை அண்ணாநகர், 0112760700058064, 8068, 8074, 8121, 8135, 0112760730023367, 3387, 3388, 3389, 3393, 3396, 3400, 3401, 3461, மேலூர் மதுரை, 0116280700047876, 7877, 7904, 7933, 7934, 7939, 7941, 7957, 7958, 7967, 7969, 7978, 7995, 0116280730034676, 4780, 4894, 4938, 4946, 0329, நாகமலை புதுக்கோட்டை மதுரை, 0113930700039821, 9837, 9844, 9901, 0186, 0113930730016827, 6832, 6876, 6877, வடக்கு வெளி வீதி மதுரா, 0131450700019967, 9971, 9989, 0075, 0131450730009204, 9207, 0079, ஒத்தக்கடை, 0113200700048829, 8887, 8889, 9766, 9891, 9900, 0113200730024927, 4941, 4945, 4946, 4979, 4980, 4981, 4982, 4991, 4995, 5004, 5006, 5009, 5022, 5040, 5043, பரவை மதுரை, 0121260700042421, 2458, 2647, 2675, 0121260730016606, 6608, 6609, 6636, பெரையூர் மதுரை, 0113020700071204, 1224, 1281, 1291, 2372, 2560, 2566, 2568, 2576, 2579, 2594, 2603, 2632, 2648, 2649, 2659, 2675, 2686, 2688, 2693, 2703, 0113020730018897, 2536, 2623, 2629, 2632, 2646, 2648, 2661, 2671, 2715, 2716, 2717, 2722, சோழவந்தான், 0113000700083819, 3826, 3827, 3828, 3852, 3860, 3866, 3872, 3875, 3876, 3946, 0113000730026575, 6596, 6624, 6627, 6696, தி. கல்லுப்பட்டி, 0119230700051161, 1177, 1179, 1191, 1195, 1228, 1229, 1241, 1244, 0119230730017106, 9711, 9720, 9734, 9735, 9744, 9749, 9783, 0311, டவுன்ஹால் ரோடு, மதுரை, 0101150700767830, 7833, 7853, 7862, 7863, 7872, 7908, 0101150730014380, 4509, 4515, 4537, வேலங்குடி, 0113220700058494, 9231, 9373, 9488, 9503, 9505, 9506, 9511, 9547, 9548, 9559, 0113220730018743, 8966, 8989, 0232, ஏழுமலை மதுரை, 0118830700051721, 1754, 1808, 1838, 1911, 3654, 3672, 3693, 3709, 3715, 3722, 3741, 3757, 3774, 3777, 3815, 3819, 3825, 3831, 3840, 3869, 3871, 3878, 3882, 3891, 3892, 0118830730017259, 0172, 0174, 0195, 0197, 0214, 0223, 0227, 0237, 0241, 0247, 0267, 0281, 0285, 0530, 0534, ஜி எச் ரோடு ராமநாதபுரம், 0114820700049996, 0791, 0956, 0959, 0960, 0963, 0980, 0985, 0994, 0996, 0999, 1006, 1008, 1017, 1022, 1023, 1027, 1037, 1039, 1047, 1056, 1065, 0114820730025224, 5225, 7574, 7666, 7736, 7743, 7744, 7751, 7773, 7781, 7787, 0209, 0213, பரமக்குடி, ராமநாதபுரம் 0125020700035528, 5542, 5638, 5649, 5664, 5665, 5671, 5685, 5702, 0125020730022936, 3038, 3040, 4413, 4500, 4509, 4519, 4523, 4552, இராமேஷ்வரம், 0135470700044161, 5144, 5150, 5157, 5169, 5174, 5176, 5180, 5188, 5191, 5210, 5211, 5225, 5229, 5233, 0135470730014454, 4459, 4464, 4466, 4479, 4495, 4500, 4502, சிக்கில் ராஜா தெரு, ராமநாதபுரம், 0123910700053827, 3857, 3904, 3907, 3939, 4489, 4984, 5102, 5104, 5113, 5115, 5117, 5121, 5125, 5129, 5143, 5145, 5154, 5160, 5169, 5171, 5177, 5183, 5184, 5190, 5193, 5195, 5207, 5211, 5212, 5217, 5219, 5234, 5240, 5252, 5254, 5257, 5259, 5261, 0123910730011172, 1220, 1295, 3863, 3871, 3872, 3873, 3874, 3880, 3886, 3891, 3892, 3894, 3906, 3907, 3908, 3911, 3912, 3913, 3918, 3922, 3927, 3928, 3930, 3931, 3932, 3937, 3939, 3942, 3948, 0223, சிக்கில் 0126730700068353, 8477, 8498, 8504, 8549, 9498, 9750, 9752, 9755, 9756, 9757, 9762, 9785, 9796, 9798, 9801, 9835, 9842, 9848, 9864, 9870, 9876, 9879, 9882, 9891, 9897, 9898, 9901, 9911, 9914, 9915, 0126730730013531, 3635, 6231, 6249, 6250, 6259, 6294, 6304, 6311, 6315, 6324, 6325, 6339, 6343, 6348, 6349, 6387, 6399, 6400, 6401, 6403, 6407, 0187, சிவகங்கா, தேவகோட்டை, 0114940700058231, 8405, 8464, 8469, 8506, 8508, 0114940730029048, 9086, 9088, 0141, இளையாங்குடி, 0124230700037141, 2765, 2944, 2954, 2981, 3002, 3013, 3017, 3024, 3026, 3027, 0124230730023576, 3613, 3701, 5459, 5460, 5461, 5462, 5476, 5477, 5483, 5492, 5493, 5498, 0228, 0231, காரைக்குடி சிவகங்கா, 0113260700044594, 5488, 5491, 5493, 5495, 5499, 5516, 5527, 5534, 5539, 0113260730018064, 8168, 8169, 8172, 8177, 8188, 8190, 8197, 8198, வடக்கு தேர் வீதி திருப்பதூர், 0132290700043990, 4038, 0132290730014926, பள்ளத்தூர், 0132640700032264, 2815, 2846, 2873, 2880, 2900, 2903, 2906, 2910, 2914, 3095, 0132640730014240, 4264, 5641, 5651, 0070, ராம்நகர் தேவகோட்டை, 0125760700036835, 6850, 6867, 6875, 6886, 0125760730013434, 3438, 3439, 3445, 3465, 3466, 3467, 3469, 3473, 3474, 0096, சிவகங்கா, 0124880700077272, 8589, 8766, 8783, 8786, 8791, 8817, 8824, 8830, 8837, 8850, 8855, 8865, 8885, 8895, 8897, 8905, 8907, 8910, 8921, 8935, 8936